உ

''மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்''



# பொன் மறை

மட்டக்களப்பு - கல்முனை

பிரசித்த நொத்தாரிசு

அமரர்

## பொன்னையா விநாயகமூர்த்தி

## கந்தையா J. P

அவர்களுக்கு

## எங்கள் நினைவாஞ்சலி

வெளியீடு:

மட்டக்களப்பு கோட்டைமுனை

ஸ்ரீவீரகத்திப்பிள்ளையார்

ஆலய பரிபாலன சபை

22 - 05 - 1996

சென். செபஸ்தியார் அச்சகம், மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாந்தி

"மண்ணுலகைத் துறந்து இறைவன்
திருவடியில் ஆனந்தத் துயில்புரியும்"



# பொ. வி. கந்தையா J. P.

( பிரசித்த நொத்தாரிசு )

தோற்றம்:
17- 10. 1910

மறைவு:
15. 11. 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலய பரிபாலன சபை

மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயப் பரிபாலன சபையின் தலைவராக காலஞ்சென்ற திரு. P.V சந்தையா J. P. பி. கொ. அவர்கள் 1968 ம் ஆண்டு தொடக்கம் 1991 ம் ஆண்டு வரையும் நிர்வகித்து வந்துள்ளார். இவர் இவ் வாலயத்தின் முன்னேற்றத்திற்காகவும் - அயராது உழைத்தவர். இவரது காலத்தில் மேற்படி ஆலயம் கும்பாபிஷேகம் செய்யப் படாமலும், ஆலயத்தின் மண்டபங்கள் - சிற்பங்கள் சிதைந்தும்- பழுதடைந்தும் இருந்ததைக் கண்ணுற்ற இவர் இவ்வாலயம் இடித்து திருப்பவும் கட்டப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட வேண்டும் என இவர் தீர்மானித்து, செங்குந்த மக்களின் ஒப்பு தலைப் பெற்று இவரின் தலைமையில் இக்காலத்தில் நிருவாக சபையில் இருந்த திரு. ஆ. வேல்முருகு உபதலைவர் திரு. நா. சிறிபத்மநாதன் செயலாளர், திரு. ந. நாகலிங்கம் பொருளாளர் ஆகியோர் உதவியுடன் இவ்வாலயத்தின் பக்கத்தில் ஒரு மண்டபம் கட்டப்பட்டு ஆங்கு பாலஸ்தாபனம் 1969ம் ஆண்டு புரட்டாதி மாதம் 14 ந் திகதி செய்யப்பட்டது.

இவரின் வேண்டுகோளுக்கு இணங்க திரு. முத்துலிங்கம் ஆச் சாரியாரிடம் ஆலயக்கட்டிட வேலையும் தூபி வேலையும் ஒப்படைக் கப்பட்டன - இவ்வாலயத்தின் சிற்ப வேலைகட்கு சிற்பாச்சாரியார் ஒருவர் வரவழைக்கப்பட்டார் - இவ்வாச்சாரியாரின் கைவண்ணம் இன்று நிலைத்திருப்பதை நாம் காணக் கூடியதாக உள்ளது.

புனருத்தாரண வேலைகள் ஸ்தம்பிதமடையும் காலங்களில் எல்லாம் - தலைவர் தன் சொந்தப் பணத்தைக் கொடுத்து வேலை கள் தொடருமாறு செய்வித்துள்ளார்.

1978 ம் ஆண்டு சூறாவளி ஏற்பட்ட பின் ஆலய வருமானம் எதுவுமில்லாமல் ஆலயத்திருப்பணி வேலைகள் தடை ஏற்பட்டது. அக் காலங்களில் தலைவரின் விடாமுயற்சியாலும் - நிருவாக சபையின் ஒத்துழைப்புடனும் காலஞ்சென்ற திரு. ஆ. கணேசமுதலி அவர் களின் குடும்பத்தாரின் பண உதவியுடனும், காலஞ்சென்ற திருமதி த. சொக்கலிங்கம் அவர்களின் பண உதவியுடனும் மகா மண்டபம் நிருத்த மண்டபம் ஆகிய மண்டபங்களுக்கு கொங்கிறீற் கூரை போடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் தலைவரின் செயலறிறத்தினால் ஆலய நிருவாக சபையினரின் உதவியுடன் வாழைச்சேனை காகித ஆலை யாழ்ப் பாணம் ஆகிய இடங்களுக்குச் சென்று நிதி வசூல் செய்து திருப் பணி வேலையைத் தொடர்ந்து நடத்தி உதவி நல்கினார்.

இதன் பின்னர் தலைவரும், நிருவாக சபையினரும் தங்கள் விடாமுயற்சியினால் தொடர்ந்து நிதி வசூல் செய்து ஆலயக் கட்டிட வேலைகள் யாவற்றையும் பூர்த்தி செய்து (இருபது) ஆண்டு களின் பின்னர் 7-9-89 ல் ஆலய குடமுழுக்கு நடைபெற்றது.

இவ்வாலயத்தின் குடமுழுக்கு நடைபெறுவதற்கு தலைவருடன் சேர்ந்து நிருவாக சபையில் இருந்த திரு. கு. ஜோதிராசா, திரு. ந. நாகலிங்கம் திரு. ந. நடராஜன், திரு. த. செல்வநாயகம் திரு. ந. சுந்தரேசன், ஆகியோருடன் காலஞ் சென்ற திரு. செ பூபாலரெத்தினம் முன்னாள் செயலாளரின் சேவைகள் குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

இவ்வாலயத்திற்கு குடமுழுக்கு காலங்களில் தலைவர் கல்முனை யில் இருந்துகூட மட்டக்களப்புக்கு வந்து நிர்வாக சபையின் ஒத்து ழைப்புடன் குடமுழுக்கு செய்வதற்கு தகுந்த ஆச்சாரியரான பிரம்மஸ்ரீ தியாகராசா குருக்கள் (B.A) அவர்களையும்-மற்றும் ஆச்சா ரியர்களையும் - ஒழுங்கு செய்து திரு. ந. நாகலிங்கம் பொருளாளரு டன் யாழ்ப்பாணம் சென்று குடமுழுக்குக்குரிய பொருள்கள் யாவும் வாங்கி வந்து - சில சமயங்களில் பொருளுதவியும் செய்து குடமு ழுக்கை யாதொரு விக்கினமில்லாமல் விநாயகப் பெருமானின் நல் லாசியுடன் நிறைவேற்றினார்.

இதன் பின்னர் - 40 நாள் மண்டலாபிஷேகத் திருவிழாவையும் அவரே முன்னின்று தொடங்கி வைத்து 40 நாட்களும் - இத்திரு விழா நடைபெற்று சங்காபிஷேகமும் செய்வித்தது தலைவரின் அளப் பரிய செயலாகும். 40 நாட்கள் மண்டலாபிஷேக பூசைகளை தலைவருடன் சேர்ந்து திரு. த. செல்வநாயகமும் நிருவாக சபை உறுப்பினரும் ஒழுங்கு பண்ணி செய்வித்தமை இங்கு குறிப்பிடத் தக்கதாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின் றோம்.

கு. மாணிக்கவாசகர்
தலைவர்

த. கோணேசமுதலி
உபதலைவர்

கே. ஸ்ரீதரன்
பொருளாளர்

கு. சோதிராஜா
செயலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

## பொ. வி. கந்தையா அவர்களைப் பற்றி ஸ்ரீ மகா மாரியம்மன் ஆலயப் பரிபாலன சபை

மட்டுநகர் தாமரைக்கேணியை பிறப்பிடமாகக்கொண்ட பொன்னையா வினாயகமூர்த்தி கந்தையா நொத்தாரிஸ் அவர்கள் நொத்தாரிஸ் தொழிலுக்காகக் கல்முனையை வசிப்பிடமாகக் கொண்டார். ஏறக்குறைய 55 ஆண்டுகள் நொத்தாரிசாகக் கடமையாற்றினார், இக்காலத்தில் சமாதான நீதவானாகவும் நியமிக்கப்பட்டார்.

மட்டக்களப்பு கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்துக்கு ஒரு தகுந்த தலைவர் இல்லாமலிருந்த போது தாமரைக்கேணி செங்குந்தகுல மக்கள் இவருடைய தலைமையை விருப்பியபடியால் 1969 ஆம் ஆண்டு மேற்படி ஆலய பரிபாலன சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். வீரகத்திப் பிள்ளையார் ஆலயமும் தாமரைக்கேணி சிறி மாரியம்மன் ஆலயமும் ஒரே நிருவாகத்தின் கீழ் இயங்கி வந்த வேளையில் நிருவாகத்தைப் பண்முகப்படுத்தும் முகமாக ஸ்ரீமகா மாரியம்மன் ஆலயத்துக்கு தனி நிருவாகம் அமைத்து நிருவகிப்பதற்கு இவர் விரும்பினார். 1969 ஆம் ஆண்டில் ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்துக்கு தனி நிருவாகம் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. ஸ்ரீ மாரியம்மன் ஆலயத்தில் ஆண்டு தோறும் ஆனிப் பூரணையில் குளிர்த்தி பாடப்படுவதுடன் கதவு அடைக்கப்படும். ஆனால் இவ்வாலயத்தை ஒரு சக்தி ஆலயமாக மாற்றிதினப் பூசை நடைபெறும் ஆலயமாக்க விரும்பினார். அவர் விரும்பம் 1990ம்ஆண்டு ஆனிப்பூரணையோடு நிறைவேறியது.

கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் இவர் தலைவராயிருந்த காலத்தில் சிவன், அம்மன் ஆலயங்கள் அமைக்கப்பட்டு ஆலயம் திருத்தப்பட்டு சிறந்த கலை அம்சங்கள் கொண்ட சிற்பங்கள் அமைக்கப்பட்டு 1989 ஆம் ஆண்டு குடமுழுக்குச் செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத் திருப்பணிக்கு தமது தேட்டத்தில் பெரும் பகுதியைச் செலவிட்டார். இன்னும் பல வேலைகளைச் செய்வதற்கு எண்ணியிருந்தார். ஆனால் நாட்டிலேற்பட்ட அமைதியின்மை காரணமாக சொந்த மண்ணை விட்டு கடல் கடந்து செல்ல வேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது

1995 ஆம் ஆண்டு கார்த்திகை 15 ம் திகதி லண்டன் மாநகரில் அவர் புகழுடம் பெய்தினார்

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனை வேண்டுவதன்றி வேறொன்றும் செய்வதற்கில்லை.

ஓம் சக்தி

இவ்வண்ணம்

கு. சுவேந்திரநாதன்
தலைவர்

கே. குமாரதாசன்
செயலாளர்

சி. கார்த்திகேசு
பொருளாளர்

6, தாமரைக்கேணி,
மட்டக்களப்பு.

ஓம் சக்தியே பராசக்தியே
ஓம் சக்தியே ஆதிபராசக்தியே
ஓம் சக்தியே மருவூர் அரசியே
ஓம் சக்தியே ஓம் விநாயகா
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்/கோட்டைக்கல்லாறு ஸ்ரீ முருகன்
முத்துமாரியம்மன் ஆலய
பரிபாலனசபைத் தலைவரும் பிரசித்த நொத்தாரிசும் ஆகிய,

## வித்துவான் ந. நாகலிங்கம் அவர்கள்

## அமரர் பொ. வி. கந்தையா

அவர்களைப் பற்றி பாடியவை.

கல்முனையில் நொத்தாரிஸ் கடமையாற்றி வந்ததிரு
நல்மணியாம் கந்தையா நமன்வாய்ப் பட்டசெய்தி
எல்லோரும் கேட்டு இடிவிழுந்தாற் போலானார்
அல்லையிலோ லண்டன்நாம் அங்குசெல்ல என்றழுதார்

## ஆசிரியப்பா

சீரிலங்கு மட்டுமா வட்டத்தின் தலைநகரில்
பேர்விளங்கு தாமரைக் கேணியாம் பெரும்பதியில்
ஊர்விளங்க வாழ்ந்த உத்தமன் பொன்னையாவின்
தாரமாய் வாய்த்த முத்துப் பிள்ளைக்கும்
மூத்தமக னாய்ப்பிறந்த கந்தையா முதல்வோனை
வினாயக மூர்த்தியென்றே அழைத்தனர் எல்லோரும்
அன்னாரும் கோட்டைமுனை விநாயகர்பால் அன்போடு
ஆலயத் தொண்டுகள் ஆற்றினர் இளமைதொட்டே
கல்வியிலும் நல்ல கவனமாய் இருந்ததனால்
நல்லாசிரிய னாய்ப்பயிற்சி பெற்றுப் பல்லாண்டு
ஆசிரியத் தொழிலை ஆற்றிவருங் காலையிலே
நொத்தாரிஸ் தேர்வில் நுட்பமாய்ச் சித்திஎய்தி
கல்முனை நகரில் கடமையைச் செய்து வந்தார்
நல்லறமாம் இல்லறத்தில் நாட்டங்கொண்டதனாலே
ஈழத்தின் தலையென விளங்கும் யாழ்ப்பாணம்
நல்லூர்க் கணியாம் கள்ளியங் காட்டில் வாழ்
செல்லம்மா என்னும் செந்தமிழ் நங்கையை
மங்கலநாண் பூட்டி வாழ்க்கைத் துணையாக்கிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்து கல்முனையில் கூடிவாழ் காலையிலே
சிவபாத சுந்தரம் காந்திமதி பாலசுந்தரம்
இராசசுந்தரம் எனும் இன்மக்கள் நால்வரைப்
பெற்று வளர்த்து பேரறிஞராக்கி வைத்தார்
ஒரேமகள் காந்திமதி உயர்ந்த மருத்துவராய்
ஒப்புடைய மருத்துவராம் ஜெகதீசனை மணந்து
இப்போது அமெரிக்க நாட்டில் வாழ்கின்றார்
சிவபாத சுந்தரம் சிறந்த கணக்காளர்
பாலசுந் தரமும் கணக்காளர் லண்டனிலே
இராச சுந்தரமும் இருக்கிறார் அவுஸ் திரேலியாவில்
ஐம்பத்தைந் தாண்டுகள் நொத்தாரிஸ் ஆகவிருந்து
சம்பத்தெல் லாம்தேடி சகலருக்கும் வழங்கினார்
கோவிற் திருப்பணிக்குக் கோணாமல் இறைத்தார்
சமூகவேலை களுக்கும் தாராளமாய்க் கொடுத்தார்
அரசிய லில்கூட அவருக்குச் செல்வாக்கு
தமிழரசுக் கட்சிக்கு தங்குமிடம் அவர்மனைதான்
ஆட்சிக் குழுவிலும் அமர்த்தினர் கட்சியினர்
தகுதியை யறிந்த அரசும் இவருக்குச்
சமாதான நீதிவான் பதவியையு மளித்தது
அச்சுக்கூடம் ஒன்றமைத்து ஆனநல் வேலைகளால்
மெச்சும் மொடேண் பதிப்பகம் ஆக்கினார்
இல்லையென்று வந்தோர்க்கும் இரப்பவர்க்கும்வேறு
பல்வேறு பணிகளுக்கு வந்துதவி கேட்பவர்க்கு
நல்லமனத் துடனே நல்குவார் பொருட்குவைகள்
கல்வி வளர்ச்சிக்கும் அள்ளிக் கொடுத்துள்ளார்
ஏழைகள் பலருயர் கல்விபெற் றுயர்வடைய
ஆனவகையில் அரும்பணிகள் செய்து வந்தார்
காலனிவ ருயிரைக் கடல்கடந்து சென்றபின்பு
தானோகவர என்று எண்ணி யிருந்தானோ
எவ்வகையு நற்பணிகள் ஏற்றபடி ஆற்றி
இவ்வுலகம் நீத்த உத்தமன் கந்தையாதன்
பேரும் புகழும் பெருஞ் சிறப்பும்
ஊர் உலகு உள்ளளவும் வாழிய வாழியவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மட்டக்களப்பு - கல்முனையில்

பிரசித்த நொத்தாரிசுவாயிருந்து

15 - 11 - 1995 அன்று இங்கிலாந்தில் சிவபத மடைந்த

# திரு. பொ. வி. கந்தையா

### சமாதான நீதிபதி அவர்களின்

# நினைவு மலர்

''மாவண்ண இந்துமகா வாரிதியாந் தெய்வ
வலம்புரிசூ லுளைந் தீன்ற வண்டரளமன்றிப்
பூவண்ணன் திருவோடு புதுவண்ணமாடும்
பூங்காவும் போலுமெங்கள் பொன்னிலங்கை நாடு''

என்று சோமசுந்தரப்புலவரால் புகழப்பட்ட நம் இலங்கைத்தீவின் கிழக்குக் கரையோரம் அமைந்ததே; மீன்பாடும் தேன்நாடாம் மட்டு நகர் சென்னைமாநகரத்தையடுத்துத் திருவல்லிக்கேணி என்னும் பேரூர் அமைந்திருப்பது போன்று; மட்டுநகரையடுத்துத் தாமரைக் கேணித் திருவூர் அமைந்து விளங்குகின்றது. திருவல்லிக்கேணியில் அதிகமாகச் செங்குந்தகுல மக்கள் வாழ்தல் போலத் தாமரைக் கேணியிலும் ஏராளமாகச் செங்குந்தர் வாழுகின்றனர்.

''செய்யுந் தொழிலெல்லாம் சீர்தூக்கிப் பார்க்குங்கால்
நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லை'' என்று ஔவையாரால் சிறப்பிக்கப்பட்டதும், பாபமற்ற தொழிலென்று தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரால் கொள்ளப்பட்டதுமான, நெசவு தொழிலைச் செங்குந்தகுல மக்கள் செய்தாலும்; அவர்களிற்பலர் புலவர்களாகவும், பண்டிதர்களாகவும், வைத்தியர்களாகவும், சோதிடர்களாகவும், பாடசாலை அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், அம்மன் கோயிற் பூசகர்களாகவும் விளங்கினர்.

அந்தத்தூய மரபின்வழிவந்த வேதாரணியம் பொன்னையா அவர்களுக்கும் பூதத்தம்பி முத்துப்பிள்ளைக்கும் மூத்தமகனாக 1908ம் ஆண்டு அவதரித்தார். நம் கந்தையா நொத்தாசியார் இவருக்கு கருணையம்மா என்னும் ஒரு தங்கையும் இருந்தார். இளம் பராயத்திலே பெற்றோரை இழந்த இப்பிள்ளைகளைத் தாய்மாமன் பூதத்தம்பி - கணபதிப்பிள்ளை (சித்திரவல்லியர்) வளர்த்து ஆளாக்கினார். திரு கந்தையா அவர்களின் பிள்ளைத் திருநாமம் விநாயகமூர்த்தி. என்பது இவர் அரசடிப்பாடசாலையில் கல்விபயின்று, அங்கேயே ஆசிரியப் பயிற்சியும் பெற்றபோது, இவரது பிறப்புச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாட்சிப்பத்திரம் தேவைப்பட்டது. அதில் சுந்தையாவென்று பதியப் பட்டிருந்ததால் தனது பெயரைப் ''பொ. வி. கந்தையா'' எனத் திருத்திக்கொண்டார்.

இவர் 1933ம் ஆண்டு மட் / காத்தான்குடி 5ம் குறிச்சிப் பள்ளிக்கூடத்தில் தமது இனத்தவரான வீரக்குட்டி – செல்லப்பா ஆசிரியருக்கு உதவியாசிரியராகப் பணியாற்றினார். இவர் சுவாமி விபுலானந்தருக்குச் சமஸ்கிருத மொழியை ஆரம்பித்து வைத்த திரு: சி. குமாரசாமி ஐயரின் மனைவிக்கும், அமரர் திரு. ஆ. நாகமணிப்பண்டிதர், மாரியம்மன் மான்மியம் விடுதலைவேட்கை முதலிய நூல்களை எழுதி வெளியிட்ட திரு: ஆ. சபாதிப்பண்டிதர் ஆகியோருக்கும் மட் / மெதடிஸ்த மத்தியகல்லூரியில் ஆங்கிலம் தமிழ்மொழி ஆகியவற்றில் பேராசிரியாாக விளங்கிய திரு. சண்முகச்சட்டம்பியாரின் மனைவிக்கும் மிகநெருங்கிய உறவினராவார். அம்மன்கோயிற் பூசகராகவும், வைத்தியராகவும் விளங்கிய வே. பூதத்தம்பிப் பூசகரின் மகள்வழிப் பேரனுமாவார்.

இந்தப் பண்டித பரம்பரையில் வந்த நம் கந்தையா நொத்தாசியாரும் நொத்தாரிஸ் பரீட்சையெழுதி ஒரேமுறையில் சித்தியடைந்தது வியப்பல்ல. திரு. பொ. வி. கந்தையா அவர்கள் 1936ம் ஆண்டு கல்முனையில் நொத்தாரிசுவாகப் பணியாற்றினார்.

இவர் யாழ்ப்பாணம் நல்லூரைச்சேர்ந்த திரு. சரவணமுத்து அவர்களின் மகள் செல்லம்மாவைத் திருமணஞ் செய்து சிவபாதசுந்தரம், பாலசுந்தரம், இராஜசுந்தரம் என்னும் மூன்று ஆண்மக்களையும், காந்திமதி என்னும் மகளையும் பெற்றனர். இப்பிள்ளைகள் உயர்கல்வி கற்று மேல்நாடுகளில் தொழில் புரிகின்றனர்.

## சேவைகள்

மட்டக்களப்பு தாமரைக் கேணியில் வாழ்ந்த செங்குந்த குல மக்கள் அமிர்தகழி மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்திற்கு ஆடி மாதத் திருவிழாவுக்குக் கொடிச் சீலை, கொடிக் கயிறு கொடுக்கும் வழக்கமும் மட்/ ஆனைப்பந்தி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்திற்கு திருவிழாவிற்கு கொடிச்சீலை கொடிக்கயிறு கொடுக்கும் வழக்கத்தோடு, கந்த சஷ்டி விரத காலத்தில் கடைசி ஆறாம் நாள் நடைபெறும் சூர சங்கார விழாவுக்கு நவவீரருக்கும் நாரதருக்கும் வேடமணிந்து சென்று கந்தசுவாமியின் பக்கம் நின்று போர் செய்யும் வழக்கமும் பண்டை நாட்டொடக்கம் நடைபெற்று வந்தது. இந்த விழாக்களில் நமது கந்தையா நொத்தாசியாரும் பாடசாலை மாணவனாக இருந்த காலத்தில் பல முறை பங்கெடுத்து சேவை புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டைமுனை ஸ்ரீ வீரகத்திப்பிள்ளையார் ஆலய வளவுக்குள் ஆரையம்பதிச் செங்குந்தச் சீமான் திரு நொத்தாரிஸ் வே. மூத்ததம்பி முதலியார் கட்டிக் கொடுத்த மடத்தில் ஸ்ரீமத் சுவாமி விபுலானந்தரால் "சிவானந்த வாசிகசாலை" தொடக்கி வைக்கப்பட்டது. அதில் சைவச்சிறார்களுக்கு ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவசமய பாடம் கற்பிக்கப்பட்டு வந்தது. அதன் ஆண்டு விழாக்களில் பெரியவர்களும் நாடகங்கள் நடத்துவார்கள். ஒரு முறை "யயாதி" நாடகம் நடத்தப்பட்டது அதில் யயாதியாக நீர்ப்பாசன அதிகாரியாக விருந்த திரு. ஏரம்பமூர்த்தியவர்களும், சுக்கிராச்சாரியாரின் மகள் தேவயானியாக நமது நொத்தாசியார் பொ. வி. கந்தையா அவர்களும் நடித்துப் புகழ் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது

இவர் யாவருடனும் சுமுகமாகப் பழகிக் கொள்வார். சாதிமத பேதமின்றி யாவருடனும் அன்பாகவும் ஆதரவாகவும் பேசுவார் அதனால் தமிழரசுக் கட்சியினர் இவரை ஆட்சிக்குழு உறுப்பினரா நியமித்தனர் இவர் பல கூட்டங்களில் தலைமை வகித்துப் பேசினார் இவரின் பொது நலசேவைகளைக் கண்டு அரசினர் இவரைச் சமாதான நீதவானாக நியமித்துக் கௌரவித்தனர்

நொத்தாசியார் மொடேன் அச்சுக்கூடம் ஒன்றைக் கல்முனையில் நிறுவிப் பலருக்குத் தொழில் வழிகாட்டினர் கோயில் விழாக்களுக்கு இலவசமாக விளம்பரங்களை அச்சிட்டுக் கொடுத்ததோடு ஏழைக் குடும்பங்களின் விவாக விஞ்ஞாபனங்களைக் குறைந்த செலவில் அச்சிட்டுக் கொடுத்தும் உதவினார். கல்முனை 2ம் குறிச்சியில் அமைந்துள்ள கற்பக விநாயகர் ஆலயப் புனருத்தாரணத்துக்குப் பொருளுதவி செய்ததுடன் அதன் நிருவாக சபையிலும் கடமையாற்றினார்,

"பெற்றதாயும் பிறந்த பொன்நாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே"

என்பதற்கிணங்கத்தான் பிறந்து வளர்ந்த கோட்டை முனையில் தம்முன்னோராற் கட்டப்பட்டுப் பரிபாலிக்கப்பட்டு வந்த ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத் தலைமைப் பதவியை 1969 ம் ஆண்டு கையேற்று ஒரு நிருவாக சபையை அமைத்துப் பொது மக்களின் பண உதவியோடும் தம் சொந்தப் பணத்தைக் கொண்டும் அதிக பணஞ் செலவழித்து புதிய முறையில் திருத்திக் கட்டி 1989 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஏழாந் திகதி வெகுவிமரிசையாக கும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றி வைத்தார்.

இவ்வாலயக் குடமுழுக்கு மலரொன்றை வெளியிட ஆயத்தங்கள் செய்தார். இவர் தாமரைக்கேணியில் அமைந்துள்ள ஸ்ரீ முத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியம்மன் ஆலய வருடாந்த விழாவின் கடைசி நாளன்று பாடப் படும் குளிர்த்திப் பாடலைப் பல ஆண்டுகளாகப் பாடிவந்தார். இவர் தாய் வழிப்பாட்டனார் பூதத்தம்பி (வேடப்பிள்ளை) யின் வாரிசு அல்லவா?

இவர் நோய் வாய்ப்பட்டு இருந்தும் உறுதியெழுதி அத்தாட்சிப் படுத்துவதைக் கைவிட்டாரில்லை ஏறக்குறைய ஐம்பத்தைந்து ஆண்டு களாக வேலை பார்த்த பெருமை இவருக்கு உண்டு. அன்றியும் பல நொத்தாரிசுமாருக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். இவரின் இனத்தவர்கள் பலர் நொத்தாரிசு மாராக விளங்கினர் கல்முனை சேனைக் குடியிருப்பில் வாழ்ந்த அமரர் திரு. க. சந்திரசேகரி நொத்தாரிசுவும், தற்போது கல்முனையில் இவரின் வீட்டில் வதியும் நொத்தாரிசு திரு. ந. நாகலிங்கம் வித்துவான் அவர்களும் திரு பொ வி. கந்தையா நொத்தரிசுவின் இனத்தவர் ஆவர்.

இவர் நோய்வாய்ப்பட்டிருந்ததனால் அவரின் மகன் திரு. க. பா சுந்தரம் அவரை லண்டனுக்கு அழைத்து வைத்தியம் செய்தார் எனினும் நமது நொத்தாசியார் அவர்கள் நம் எல்லோரையும் தவிக்க விட்டு லண்டனில் 1995 ம் ஆண்டு நவம்பர் மாதம் சிவமதமடைந்தார்

எல்லாருக்கும் நல்லவராக வாழ்ந்த நொத்தாசியாரின் மறைவு அவர் குடும்பத்தினருக்கும் இனத்தவர்களுக்கும் நண்பர்களுக்கும் பேரிழப்பாகும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தியஹி

தொகுப்பு: தமிழ்மணி
சிவ விவேகானந்த முதலியார்
(ஓய்வு பெற்ற அதிபர், ஆரையம்பதி.)

## பெரியபுராணம்

மண்ணிற் பிறந்தால் பெறும்பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார்தமை அமுது செய்வித்தல்
கண்ணினால் அவர்நல் விழாப்பொலிவு கண்டார்தல்
உண்மையாம் எனில் உலகர்முன் வருகென உரைத்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு. பொ. வி. கந்தையா
## நொத்தாசியாரின் மறைவு குறித்து
## பொது மக்களின் இரங்கல்

1. சீருயருஞ் செங்குந்தர் குலத்து மேலோன்
செப்பமுறு பொன்னையா முதலியாரும்
பேருயரும் பூசகராம் பூதத்தம்பி
பெற்ற மகள் முத்துப் பிள்ளையை மணந்து
ஊர்புகழும் கந்தையா வோடுதங்கை
உமை புரையும் கருணையம்மா தனையும் பெற்றார்
பார்தனிலே பலவருடம் வாழ்ந்து பின்னர்
பரமனடி சேர்ந்தனரே தந்தை தாயும்.

2. தாய்மாமன் கணபதிப் பிள்ளையாரும்
தயவாகவளர்த் தெடுத்தார் தரணி மீது
ஓய்வின்றிக் கல்வி கற்றுக் கந்தையாவும்
உபாத்தியாயர் ஆயினரே உறவோர் மெச்ச
காய்கனிந்த வாறதுபோல் கலையிற் தேர்ந்து
கருதரிய நொத்தாரிஸ் பதவி பெற்றார்
வாய் மொழியின் சாதுரியப் பேச்சினாலே
வாழ்ந்தாரே கல்முனையில் பலபேராண்டு.

3. ஆலயங்கள் பல திருத்தி அபிஷேகித்து
ஆதுலர்க்கும் ஏழைகட்கும் அன்னம் நல்கி
கோலமுற நூல் பதிக்கும் அச்சுக்கூடம்
குன்றாத வளமுடனே நடத்தி நின்று
ஞாலமதில் தமிழ் மொழிக்காய் நயந்து பேசி
நல்ல சமாதானநீதிபதிப் பதவி பெற்றுக்
காலமது வந்துற்ற போது இந்தக்
காசினியை விட்டகன்றீர் ஐயோ! ஐயா!

4. எல்லெவர்க்கும் நல்லவராய் வாழ்ந்த ஐயா!
எம்துயரம் போக்குவது எப்போ தந்தோ!
வல்லவனாய் வாழ்ந்த வுமை லண்டனுக்கு
வரவழைத்துக் கவர்ந்தானோ காலன் தானும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொல்லுலகில் கனதூரம் சென்றதால்நும்
சுடர் முகத்தைக் கண்டிலமே சுற்றம், நண்பர்
அல்லலுறும் தனையர், மகள், மனைவி, பேரர்
அனைவோரும் உமையெப்போ காண்போமையா.

5· சங்கநிதி, பதுமநிதி இரண்டும் பெற்றுத்
தரணியெலா மொருகுடைக்கீழ் ஆண்ட மன்னர்
தங்கள்விதி வந்துற்ற போது இந்தச்
சகமதனில் உடலொருவிச் சென்றாரம்மா
பொங்குகடல் சூழுலக வாழ்க்கை இஃது
பேதலித்து அழுவதிலோர் பயனேயில்லை
எங்களுக்கு மிந்தவழி இருக்குதென்றே
எல்லோரும் அமைதி கொள்வோம் சாந்தி, சாந்தி

ஆக்கம்

ஆரையூர் நல் அழகேச முதலியார்

# மூல மந்திரம்

ஓம் சக்தியே ! பராசக்தியே !
ஓம் சக்தியே ! ஆதி பராசக்தியே !
ஓம் சக்தியே ! மருவூர் அரசியே !
ஓம் சக்தியே ! ஓம் விநாயகா !
ஓம் சக்தியே ! ஓம் காமாட்சியே !
ஓம் சக்தியே ! ஓம் பங்காரு காமாட்சியே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்முனையில்

## அமரர் திரு. பொ. வி, கந்தையா

பிரசித்த நொத்தாரிஸ் ———

1) கல்முனையில் 1937ம் ஆண்டு காரியாலயம் அமைத்து நிரந்தரமாக வசிக்கத் தொடங்கினார்.

2) 1964ம் ஆண்டு கல்முனையில் ஆரம்பிக்கப்பட்ட சைவ சமய அறநெறிப்பாடசாலையில் ஓர் ஆசிரியராகவும் அதன் வளர்ச்சிக்காகவும் பாடுபட்டார்.

3) கல்முனை ஸ்ரீ சர்வார்த்த சித்திவினாயகர் ஆலய நிர்வாகசபை உறுப்பினராயிருந்து கட்டிடவேலை கும்பாபிசேகம் முதலியவற்றிற்கு முன்னின்று உழைத்தார்.

4) கல்முனை இ. கி. மி. பாடசாலை கட்டிடம். அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்டார்.

5) கல்முனை இந்து இளைஞர் மன்றம் சைவமகாசபை ப. நோ. கூ, சங்கம் ஆகியவற்றிற்கு நிர்வாக உறுப்பினராயிருந்து தொண்டு செய்தவர்.

பொதுவாகக்கூறின் கல்முனை மக்களுக்கு ஒரு இனத்தவனாகவும், சினேகிதனாகவும் ஓர் ஆலோசகனாகவும் இருந்து தொண்டாற்றினார். இவர் எம்மிடையில் இல்லாவிடினும் இவர் விட்ட பணிகளைத் தொடர்ந்து செய்வதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலி.

ஆ. அழகையா 'வாணி'
உடையார் வீதி,
கல்முனை 2.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிசங்கரர் அருளிய

# கனக தாரா ஸ்தோத்திரம்

# பொன் மழை

கவிஞர் கண்ணதாசன்

## பாடல் பிறந்த வரலாறு

இளம் வயதில் துறவு பூண்ட ஆதிசங்கரர், தமது துறவு நெறிக்கேற்ப நாள்தோறும் இறைவழிபாடு முடித்து பிச்சை ஏற்கப் புறப்படுவார். மற்றவர் இட்டதை உண்டு தம் இறைபணியைத் தொடர்வார்.

அம்முறைப்படி, ஒருநாள் சங்கரர் சோமதேவர் என்பவருடைய இல்லத்திற்குச் சென்று "பகவதி பிஷாந் தேஹி" என மும்முறை உச்சரித்தார். சோமதேவர் அப்போது இல்லத்தில் இல்லை. அவருடைய துணைவியார் தருமசீலை அங்கிருந்தார்.

பிச்சைக்கு வந்திருந்தவரை எட்டிப்பார்த்த அம்மையாருக்கு எல்லையில்லா வியப்பு மூண்டது. பாலசங்கரரைப் பார்த்தவுடன் பரமேஸ்வரனே பிச்சைக்கு வந்து விட்டாரோ என்று அதிசயித்தார். ஆனால் அவரிடத்தில் பிச்சை இடுவதற்கான பொருள் ஏதும் இல்லை.

கல்வியில் தேர்ச்சி பெற்றிருந்த சோமதேவர் வறுமையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். அவரும் சங்கரரைப் போலவே பிச்சை கேட்கச் சென்றிருந்தார். வீட்டில் ஒன்றும் இல்லை.

எனவே மிகுந்த வருத்தத்துடன் அம்மையார் சங்கரரைப் பார்த்து "நான் பாவியிலும் படுபாவி. பகவானே பிச்சைக்கு வந்திருக்கும்போது, ஈவதற்கு ஒன்றுமில்லையே என ஏங்குகிறேன். என்னை மன்னிக்க வேண்டும்" என இறைஞ்சினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரரோ "அம்மையீர், அடியேனுக்கு அளிப்பதற்கு ஒன்றுமே இல்லையென்று கலங்க வேண்டாம். அன்னமிட மார்க்கம் இல்லை யென்றால் பறவாயில்லை அன்னத்திற்குத் துணையாக இருக்கும் உண்ணத்தகு பொருள் எதுவானாலும் எவ்வளவு சிறிதானாலும் அன்போடு கொடுங்கள் "என வேண்டினார்.

வீட்டிற்குள் சென்று பார்த்த அம்மையாருக்கு ஒன்றும் கிடைக்க வில்லை. ஒருபழையபாத்திரத்தில் நெடுநாட்களுக்கு முன்பு செய்த நெல்லிக்காய்கள் ஊறுகாய் ஒன்று மீதமிருந்தது. மனத் தயக்கத் துடன் அம்மாதரசி அந்த நெல்லிக்காயை மகான் சங்கரரின் பிச் சைப்பாத்திரத்தில் இட்டார்.

அகமகிழ்ந்த ஆதிசங்கரர், "அம்மையே" அன்புடன் தாங்கள் எனக்களித்த இந்த நெல்லிக்காயை விடச் சிறந்த பொருள் இவ்வு லகில் கிடையாது. இதை என்தாய் மிகவும் ரசித்து உண்பார் அதி திக்கு அளித்த இந்த ஆகாரத்தால் உங்களைப்பிடித்திருந்த வறுமை இன்றோடு அழிந்து விட்டது. இனிமேல் உங்கள் கணவர் பிச்சைக் குப்போகவேண்டிய அவசியமில்லை" என்றுரைத்து, செல்வத்துக்க திதேவதையான மகாலட்சுமி தேவியாரை மனதால் நினைத்து தியானம் செய்து, "கனகதாரா' ஸ்தோத்திரத்தைப் பாடித் திரு மகளுக்கு வழிபாடு செய்தார்.

தேவி, சங்கரர் முன்தோன்றி "வறுமையில் வாடிய குசேலரும் சுசிலையும் பகவான் கண்ணபிரான் திருவருளால் குபேர சம்பத் தைப் பெற்றனர். ஏதிலார் பெற்ற செல்வத்தால், நியமங்களை மறந்து சுகபோகங்களில் மனதை அலையவிட்டனர். பிச்சைக்கு வந்தவர்களுக்குப் பசியாற்றாது விடுத்தனர் அப்பாவ வினையின் பயனாக இந்த யுகத்தில அவர்கள் இங்கே வறுமைக்கோலம் பூண்டு தவிக்கின்றனர்" என்ற உண்மையைப் புலப்படுத்தினார்.

இருப்பினும் வறுமையிலும் செம்மையான மனத்துடன் சங்கர ருக்கு நெல்லிக்காயைப் பிச்சையாக இட்ட காரணத்தால், தேவி மனமிளகி அந்த இல்லத்தின் மீது தங்கமயமான நெல்லிக்காய்களை மழைபோல் பொழிந்தார். அதோடன்றி 'கனகதாரா' வைப் பாடு வோர் அனைவருக்கும் தன் நல்லருள் கைகூடும் என்று உறுதி கூறினார்,

பொன்மாரி பொழியச் செய்த அந்தப் பாடல்கள் இங்கே தொகுத்தளிக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞர் கண்ணதாசன்
## பொன் மொழிப் பாடல்கள்

மாலவன் மார்பில் நிற்கும்
மங்கலக் கமலச் செல்வி
மரகத மலரில் மொய்க்கும்
மாணிக்கச் சுரும்பு போன்றாய்
நீலமா மேகம் போல
நிற்கின்ற திருமா லுந்தன்
நேயத்தால் மெய்சி லிர்த்து
நிகரிலாச் செல்வம் கொண்டான்
மாலவன் மீது வைத்த
மாயப்பொன் விழிஇரண்டை
மாதுநீ என்னிடத்தில்
வைத்தனை என்றால் நானும்
காலமா கடலில் உந்தன்
கருணையால் செல்வம் பெற்று
கண்ணிறை வாழ்வு கொள்வேன்
கண்வைப்பாய் கமலத் தாயே! 1

நீலமா மலரைப் பார்த்து
நிலையிலா தலையும் வண்டு
நிற்பதும் பறப்ப தும்போல்
நின்விழி மயக்கம் கொண்டு
கோலமார் நெடுமால் வண்ணக்
குளிர்முகம் தன்னைக் கண்டு,
கொஞ்சிடும், பிறகு நாணும்
கோதையார் குணத்தில் நின்று,
ஏலமார் குழலி அந்த
இருவிழி சிறிது நேரம்
என்வசம் திரும்பு மாயின்
ஏங்கிய காலம் சென்று
ஆலமா மரங்கள் போல
அழிவிலாச் செல்வம் கொண்டு
அடியவன் வாழ்வு காண்பேன்
அருள்செய்வாய் கமலத் தாயே! 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'மந்திரம் உரைத்தாற் போதும்
மலரடி தொழுதாற் போதும்'
மாந்தருக் கருள்வேன் என்று
மலர்மகள் நினைத்தால் போதும்
இந்திர பதவி கூடும்;
இகத்திலும் பரங்கொண் டாடும்;
இணையறு செல்வம் கோடி
இல்லத்தின் நடுவில் சேரும்!
சந்திர வதனி கண்கள்
சாடையிற் பார்த்தாற் போதும்
தாய்விழி பட்ட கல்லும்
தரணியில் தங்க மாகும்!
எந்தவோர் பதவி வேட்டேன்!
எளியனுக் கருள்செய் வாயே!
இகத்தினில் செல்வம் தந்து
இயக்குவாய் கமலத் தாயே! 3

நற்குடிப் பிறந்த பெண்கள்
நாயகன் தனைப்பார்த் தாலும்
நாணத்தால் முகம் புதைத்து
நாலிலோர் பாகம் பார்ப்பார்!
பற்பல நினைத்த போதும்
பாதிக்கண் திறந்து மூடி
பரம்பரை பெருமை காப்பார்!
பாற்கடல் அமுதே! நீயும்
அற்புத விழிக ளாலே
அச்சுத முகுந்தன் மேனி
அப்படிக் காண்ப துண்டு!
ஆனந்தம் கொள்வ துண்டு;
இப்பொழு தந்தக் கண்ணை
என்னிடம் திருப்பு தாயே!
இருமையும் செழித்து வாழ
இகத்தினில் அருள்வாய் நீயே! 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுஎனும் பெயரில் வாழ்ந்த
மனமிலா அரக்கன் தன்னை
மாபெருப் போரில் வென்ற
மாலவன் மார்பி லாடும்
அதிசய நீல மாலை
அன்னநின் விழிகள் கண்டு
அண்ணலும் காலந் தோறும்
ஆனந்தம் கொள்வ துண்டு!
பதுமநேர் முகத்தி னாளே!
பதுமத்தில் உறையும் செல்வி!
பாற்கடல் மயக்கும் கண்ணை
பதியின்மேற் பாய்ந்த கண்ணை
பேர்த்தெடுத் தென்மேல் வைத்தால்
பிழைப்பன்யான் அருள்செய் வாயே,
பேரருள் ஒருங்கே கொண்ட
பிழையிலாக் கமலத் தாயே! 5

கைடப அரக்கன் தன்னை
கடிந்தநின் கணவன் மார்பு
கார்முகில் என்னத் தோன்றி
கருணைநீர் பொழியுங் காலை,
மைதவழ் மார்பில் வீசும்
மயக்குறும் மின்னல் என்று!
மயங்குவன் திருமால். பின்னர்
மகிழ்வன்நின் விழிதா னென்று!
செய்தவப் பிருகு வம்சச்
சேயெனப் பிறந்து எங்கள்
திருவென வளர்ந்த நங்காய்!
தினமும்யாம் வணங்கும் கண்ணாய்!
கொய்தெடு விழியை என்மேல்
கொண்டுவந் தருள்செய் வாயே!
கொற்றவர் பணிகள் செய்யும்
கோலமார் கமலத் தாயே! 6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரினில் அரக்கர் கூட்டம்
புறங்கண்ட நெடியோன் தன்னை
போரின்றிக் குருதி யின்றிப்
புறங்காணத் துடித்து வந்த
மார்ரனை ஊக்கு வித்த
வாளெது கமல நங்காய்?
மங்கைநின் விழிக ளன்றோ
மாலவன் தன்னை வென்ற!
தேரிய மாரன் உன்னைத்
தேரெனக் கொண்ட தாலே
திருமலை வெங்க டேசன்
திறத்தினை வென்றான் அன்றோ!
கூரிய விழியாய் உன்றன்
குறுவிழி தன்னை என்பால்
கொண்டுவந் தால்யான் உய்வேன்
கொடுத்தருள் கமலத் தாயே! 7

நீருண்ட மேகக் கண்கள்;
நிழலுண்ட கரிய கூந்தல்;
நேர்கொண்ட மாந்தர் வீட்டில்
நிலைகொண்ட செல்வப் பந்தல்!
சீர்கொண்ட அமுதச் செல்வி
சில்லென்ற காற்றுப் பாய்ந்தால்
சேர்கின்ற மேகத் தண்ணீர்
சிதறுண்டு பாய்வ தைப்போல்
வேர்கொண்ட பாவ மேனும்
வினைகொண்ட பாவ மேனும்
வேய்கொண்ட தோளி னாய்உன்
விழிகண்டால் தீர்ந்து போகும்!
தேர்கொண்டேன் புரவி இல்லை!
செல்வமாம் புரவி யாலே
திருவருள் செய்வாய் நீயே
தேப்பெரும் கமலத் தாயே] 8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை பேர்க்குக் கிட்டும்
இறையருள் ஆன்ம சாந்தி!
இகமெனும் கடலில் வீழ்ந்து
எவர்பிழைத் தார்கள் நீந்தி?
தத்துவப் படியே யாவும்
தலைமுறை வழியே கிட்டும்!
தவமெனும் முயற்சி யாலே
பவவினை தணந்து போகும்!
அத்தனை முயற்சி என்ன
அண்ணல்மா தேவி கண்ணில்
அருள்மழை வந்தாற் போதும்
அகம்புறம் முக்தி யாகும்!
இத்தனை சொன்ன பின்பும்
இன்னுமா தயக்கம் தாயே!
இல்லத்தைச் செல்வ மாக்கி
இன்னருள் புரிவாய் நீயே! 9

ஆக்கலும் அழித்தல் காத்தல்
அருள்நிறை இறைவன் சக்தி!
அன்னவன் தோளில் நீயே
அனைத்துமாய் விளங்கும் சக்தி!
ஆக்கலில் வாணி யாவாய்:
அளித்தலில் திருவாய் நிற்பாய்;
அழிக்கின்ற வேளை வந்தால்
அந்தமில் துர்க்கை யாவாய்!
தீக்கொண்ட கரத்து நாதன்
திருப்பரா சக்தி யாக
திரிபுரம் ஏழு லோகம்
திருவருள் புரிந்து நிற்பாய்!
வாக்குயர் கமலச் செல்வி
வானடைநீ, தென்றல் தீயே!
வளமென இரப்போர்க் கெல்லாம்
வந்தருள் புரிகின் றாயே! 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதத்தின் விளைவே போற்றி !
விளைப்பயன் விளைப்பாய் போற்றி !
சீதத்தா மரையே போற்றி !
செம்மைசேர் அழகே போற்றி !
கோதைப்பண் புடையாய் போற்றி !
குளிர்ந்தமா மழையே போற்றி
ஓர்தத்து வத்தில் நிற்கும்
உமையவள் வடிவே போற்றி !
பாதத்தைக் கமலம் தாங்க
பல்லுயிர் காப்பாய் போற்றி !
நாதத்து நெடியோன் கொண்ட
நங்கைநீ போற்றி! போற்றி !
பாதத்தில் சிரசை வைத்துப்
பணிகின்றேன் போற்றி! போற்றி !
மாதத்தில் ஒருநாள் கூட
மறந்திடாய் போற்றி! போற்றி ! 11

அன்றலர் கமலம் போன்ற
அழகிய வதனி போற்றி !
அலைகடல் அமுத மாக
அவதரித் தெழுந்தாய் போற்றி !
குன்றிடா அமுதத் தோடு
கூடவே பிறந்தாய் போற்றி !
குளிர்ந்தமா மதியி னோடும்
குடிவந்த உறவே போற்றி !
மன்றத்து வெங்க டேசன்
மனங்கவர் மலரே போற்றி !
மாயவன் மார்பில் நின்று
மயிலெனச் சிரிப்பாய் போற்றி !
என்றைக்கும் நீங்கா தாக
இருக்கின்ற திருவே போற்றி !
எளியவன் வணங்கு கின்றேன்
இன்னருள் போற்றி ! போற்றி ! 12


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமரை மலரில் நிற்கும்
தளிரன்ன திருவே போற்றி !
தாமரை வதனங் கொண்ட
தங்கமா மணியே போற்றி !
தாமரை கரத்தில் ஏந்தித்
தவமென நிற்பாய் போற்றி !
தாமரைக் கண்ணான் காக்கும்
தரணியைக் காப்பாய் போற்றி !
தாமலை போல வந்த
தவமுனி தேவர்க் கெல்லாம்
தாமரைக் கைகள் காட்டி
தயைசெயும் திருவே போற்றி !
தாமரைக் கண்ணால் செல்வம்
தந்தருள் புரிவாய் போற்றி !
தாள், மறை, நானோ வார்த்தை
தர்மமே போற்றி ! போற்றி ! 13

பெண்ணெனப் பிறந்தா யேனும்
பெரும்திறன் கொண்டாய் போற்றி !
பிருகுவம் சத்தில் வந்த
பீடுடை வதனம் போற்றி !
தண்ணளி வேங்க டத்தான்
தழுவிடும் கிளியே போற்றி !
தத்துநீர்க் குளத்தில் ஆடும்
தருணியே லக்ஷ்மீ ! போற்றி !
சித்திரக் கொடியே போற்றி !
செம்மணி நகையே போற்றி !
ஸ்ரீதரன் திருப்பா தங்கள்
சேவைசெய் குயிலே போற்றி !
பத்தினிப் பெண்டிர் தம்மைப்
பார்வையில் வைப்பாய் போற்றி !
பக்தருக் கருள்வாய் போற்றி !
பணிந்தனம் போற்றி ! போற்றி ! 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைப் பறிக்கும் காட்சி
கவிந்தநின் வடிவம் போற்றி !
கமலப்பூ வதனம் போற்றி !
கமலமா விழிகள் போற்றி !
மண்ணிலும் விண்ணு ளோர்க்கும்
மங்கலம் நிறைப்பாய் போற்றி !
மண்டல இயக்கத் திற்கே
மந்திர மானாய் போற்றி !
விண்ணவர் வணங்கும் தேவி
விந்தையின் மூலம் போற்றி !
விரிமலர்க் கண்ணன் தேவன்
விரும்பிடும் நகையே போற்றி !
எண்ணிய படியே உன்னை
ஏத்தினேன் போற்றி ! போற்றி !
இசைபட வாழ வைப்பாய்
இலக்குமி போற்றி ! போற்றி ! 15

மைவிழிக் குவளைக் கண்ணாய் !
வரையிலாத் திருவே போற்றி !
வானவர் மண்ணோர்க் கெல்லாம்
வணக்கமாய் நின்றாய் போற்றி !
மெய்விழி செவிவாய் நாசி
விழைந்திடும் இன்பம் போற்றி !
விரித்தமேற் புலனுக் கெல்லாம்
விளங்காத பொருளே போற்றி !
கைநிறை செல்வம் யாவும்
கடைக்கணால் அருள்வாய் போற்றி !
காக்கையை அரச னாக்கும்
கைமலர் உடையாய் போற்றி !
செய்ததீ வினையை எல்லாம்
தீர்க்கின்ற நெருப்பே போற்றி !
சிறுமையைப் பெருமை யாக்கும்
திருப்பதம் போற்றி ! போற்றி ! 16


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகனன் துணையே போற்றி !
முழுநிலா வடிவே போற்றி !
மூவுல கங்கள் தேடும்
முதற்பெரும் பொருளே போற்றி !
தேகத்தே ஒளியை வைத்த
செம்மணிக் குன்றே போற்றி !
தீராத ஆசைக் குள்ளே
திருவென நிற்பாய் போற்றி !
ஓர்கணம் தொழுதாற் கூட
ஓடிவந் தளிப்பாய் போற்றி !
ஊர்ந்தமா மேக வண்ணன்
உவப்புறச் சிரிப்பாய் போற்றி !
தாள்களில் பணிந்தே னம்மா
தண்ணருள் தருவாய் போற்றி !
தலைமுதல் பாதம் மட்டும்
தாழ்கின்றேன் போற்றி ! போற்றி ! 17

கண்பட்டால் மனது பாடும்
கார்குழல் அலையே போற்றி !
காதள வோடும் கண்ணால்
காசினி அளந்தாய் போற்றி !
வெண்பட்டால் அழகை மூடும்
வியத்தகும் சிலையே போற்றி !
வெண்மல்லி கைப்பூ மாலை
விளையாடும் தோளீ போற்றி !
பண்பட்டார் இல்லா தார்தம்
பக்குவம் அறிவாய் போற்றி !
பணிபவர் இதயத் துள்ளே
பாசுரம் படிப்பாய் போற்றி !
விண்முட்டும் ஞானம் பெற்ற !
வேதநா யகியே போற்றி !
வேயிரு தோளின் சக்தி
விரித்தருள் போற்றி ! போற்றி ! 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டலத் திசைகள் தோறும்
மதகரி குடங்கள் ஏந்தி
மங்கைக்கு நன்னீ ராட்ட
கங்கைநீர் குடத்தில் மாந்தி
தண்டலைக் கூந்தல் ஊற
சர்வமங் களநீ ராட்டி,
தாமரைப் பூவின் மேலோர்
தாமரைப் பூவைச் சூட்டி
மண்டிய தூய்மைத் தாய்க்கு
மற்றுமோர் தூய்மை நல்கி
மருவிலாப் பளிங்கின் மேனி
மாசறத் துலங்கச் செய்யும்
அண்டமா நெடியோன் தேவி,
அலைகடல் அரசன் பெண்ணே !
அறிதுயில் கொள்ளும் காலை
அடியவன் வணங்கு கின்றேன் ! 19

பூவினில் உறையும் பூவே !
பொன்னிடை உறையும் பொன்னே !
பூஜைக்கே உரியோன் பூஜை
புரிகின்ற காதற் செல்வி
ஏவுமோர் உலகத் துள்ளே
இன்மையான் ஒருவ னேதான்
இவனுனை இரந்து நிற்க
இதுவொரு நியாயம் போதும் !
தாவுநீர்க் கடலைப் போல
தண்ணருள் அலைகள் பொங்கும்
சந்திரப் பிறைப்பூங் கண்ணி
சற்றுநீ திரும்பிப் பார்த்தால்
மேவிய வறுமை தீர்ப்பேன்
மெல்லிடைய பூங்கோ தாய், நின்
மின்னிடும் விழிகள் காண
விழைந்தனேன் போற்றி ! போற்றி ! 20

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புவி ஈன்ற தாயே !
மோகனச் சிரிப்பின் செல்வி !
மூவிரண் டொன்றாய் வந்த
பிரமத்தின் மொத்த மாக
அற்புதம் காட்டி நிற்கும்
அழகிய சிற்பச் சோதி
ஆனந்தத் தெய்வ மாதா
அரும்பெறல் அன்னை பேரில்
இப்பொழு துரைத்த பாடல்
எவரெங்கு பாடி னாலும்
இப்புவி உளநாள் மட்டும்
இன்பமும் அறிவும் சேரும் !
நற்பெரும் பேறும் கிட்டும் !
நன்னிலை வளரும்; என்றும்
நாட்டுக்கே ஒருவ ராக
நாளவர் உயர்வார் உண்மை



"பொன்மழை"

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவளி

வேதாரணியம் — பொன்னையா

பூதத்தம்பி — முத்துப்பிள்ளை

↓

| | |
|---|---|
| பொ. வி. கந்தையா | பொ. கருணையம்மா |
| + | + |
| ச. செல்லம்மா | த. குழந்தைவேல் |

↓

| | | | |
|---|---|---|---|
| சிவபாதசுந்தரம் | பாலசுந்தரம் | காந்திமதி | இராஜசுந்தரம் |

தொகுப்பு:

**தமிழ்மணி சிவ. விவேகானந்த முதலியார்**

ஓய்வு பெற்ற அதிபர்

ஆரையம்பதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

# நன்றி நவிலல்

எமது மத்தியில் பல வழிகளில் சமய சமூக சேவைகளைச் செய்து அண்மையில் லண்டனில் 15 - 11 - 95 இறைவனடி சேர்ந்த எம் உறவினர் பொ. வி. கந்தையா (பி. நொ) அவர்கள் மறைந்த செய்தி கேட்டு மனம் நொந்த நாங்கள் அவருடைய பூதவுடலை காணா விடினும் அவர் புகழ் பரப்பும் சேவைகளைப் பேசுவதில் ஆறுதலடைந்து, அன்னாரின் நினைவாக அஞ்சலிக் கூட்டத்தை நடத்த நான் அழைத்த பொழுது வந்து பல வழிகளிலும் உதவிபுரிந்தவர்களுக்கு, மட் / ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபை, மட்/தாமரைக்கேணி ஸ்ரீ மாரியம்மன் ஆலய பரிபாலன சபை மற்றும் எமது உறவினர்கள், அபிமானிகட்கும் நினைவாஞ்சலியை வெளியிட ஒத்தாசை புரிந்தவர்களுக்கும் இன்றைய அஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஓம் பராசக்தி


இவ்வண்ணம்,
**சக்தி. கே. குமாரதாசன்**

6, தாமரைக்கேணி
குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.
22-05-96

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சாந்தி

"மண்ணுலகைத் துறந்து இறைவன்
திருவடியில் ஆனந்தத் துயில்புரியும்"



# பொ. வி. கந்தையா J. P.

( பிரசித்த நொத்தாரிசு )

| | |
|---|---|
| **தோற்றம்:** | **மறைவு:** |
| **17- 10- 1910** | **15- 11- 1995** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org